சின்ன சின்னதாய்

ரத்தினம் குழும நிறுவனங்களில் நடந்த சர்வதேச மகளிர் தின விழாவில் பங்கேற்றோர்.

கோவை ரத்தினம் குழுமத்தில் மகளிர் தின கொண்டாட்டம்

கோவை

ரத்தினம் குழும நிறுவனங்களில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

ரத்தினம் குழும நிறுவனங்கள் இயக்குநர் ஷிமா செந்தில் தலைமை வகித்தார். சிஆர்பிஎஃப் துணை தளபதி ஒலிம்பியன் மற்றும் தியான் சந்த் விருது பெற்ற ஜின்சி பிலிப் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக '320 இன்னர் வீல் கிளப்' மாவட்ட இயக்குநர் ரம்யா காமேஷ், கோவை மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர் (பொது) நிறைமதி சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். வணிகம், கல்வி, விளையாட்டு மற்றும் சமூக சேவை போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய பெண்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

சிறந்த பெண்கள் அதிகாரமளித்தல், சேவைக்கான பெருந்தகையாளர் விருது மூத்த பிசியோதெரபிஸ்ட் மற்றும் உடற்தகுதி பயிற்சியாளர் திவ்யா ஜெயக்குமார், சிறந்த மருத்துவருக்கான மேருமணி விருது ஸ்ரீ அபிராமி மருத்துவமனை நிறுவனர் டாக்டர் குந்தவி, சிறந்த விளையாட்டு தடகள வீரருக்கான வளர்வின் மணி விருது டாக்டர் வசந்தா ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த இன்ஸ்பிரேஷனுக்கான சுடர்மிகுந்தாள் விருது கோவையின் தலை சிறந்த துப்பறியும் அதிகாரி யாஸ்மினுக்கு வழங்கப்பட்டது. சிறந்த பன்முக உள்ளடக்க படைப்பாளருக்கான சொற்சுடர் விருது படைப்பு இயக்குநர் அனுக்ரஹாவுக்கும், சிறந்த நடனக் கலைஞருக்கான விரலி பெருங்கோடி விருது ஆராதனாஸ் ஸ்கூல் ஆஃப் டான்ஸ் இயக்குநர் மீனாட்சி சாகருக்கும் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

ரத்தினம் குழும நிறுவனங்களின் பெண் ஊழியர்கள் நடனம், பேஷன் ஷோ மற்றும் விளையாட்டுகள் மூலம் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். பெண்களின் சரியான முன்னேற்றம் குறித்த தங்கள் கருத்துக்களை விருது பெற்றவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

உதகையில் திபெத்தியர்கள் அமைதி பேரணி

உதகை

திபெத் எழுச்சி தினத்தை முன்னிட்டு உதகையில் திபெத்தியர்கள் பங்கேற்ற அமைதிப் பேரணி நடந்தது.

கடந்த பல ஆண்டுகளாக திபெத்தை சீனா ஆக்கிரமித்து அதன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துள்ளது. திபெத்தில் சீனாவின் அத்துமீறல்களால் ஏராளமான திபெத்தியர்கள் உயிரிழந்துள்ளனர். திபெத்திற்கு சுதந்திரம் தர வேண்டி பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த போராட்டங்களில் பலர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் அடக்கு முறையால் திபெத் சீன ஆதிக்கத்தின் கீழ் வந்த பிறகு பெரும்பாலானவர்கள் திபெத்தில் இருந்து இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் அகதிகளாக குடியேறி விட்டனர். இவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் வசித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் உதகை, கன்னியாகுமரி, கொடைக்கானல் போன்ற சுற்றுலா தலங்கள் நிறைந்த மாவட்டங்களில் சுற்றுலா சார்ந்த தொழில்களில் ஈடுபட்டவாறு அங்கேயே தங்கி உள்ளனர். நீலகிரி மாவட்டம் உதகையிலும் 100–க்கும் மேற்பட்ட திபெத் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்நிலையில், சீன அத்துமீறல்களில் இறந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும் மார்ச் 10–ம் தேதி திபெத் எழுச்சி தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு திபெத்தியர்கள் பங்கேற்ற அமைதிப் பேரணி உதகையில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற திபெத்தியர்கள் சீனாவுக்கு எதிராக போராடி உயிரிழந்த திபெத்தியர்களின் நினைவாகவும், சீனாவின் ஆக்கிரமிப்பில் இருந்து திபெத்திற்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும் பேரணியாக சென்றனர்.

தாவரவியல் பூங்கா அருகே தொடங்கிய பேரணி மதுவானா, சேரிங்கிராஸ் மற்றும் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் தாவரவியல் பூங்கா அருகே நிறைவடைந்தது. திபெத் நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நகை, பணம் திருட்டு வழக்கில் 3 பேர் கைது

பொள்ளாச்சி

கோவை மாவட்டம் நெகமம் அருகே ரங்கம்புதூர், ஸ்ரீரங்கா கார்டனில் வசித்து வருபவர் அம்மாசை (44). திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி பிச்சையம்மாள் (40), நெகமம் அரசு மருத்துவமனையில் தினக்கூலி பணியாளராக உள்ளார். கடந்த 3-ம் தேதி இருவரும் வீட்டை பூட்டி விட்டு பணிக்கு சென்றுள்ளனர். அப்போது வீட்டுக்கதவை உடைத்து உள்ளே புகுந்த நபர்கள் ஐந்தே முக்கால் பவுன் தங்க நகை மற்றும் ரூ. 1 லட்சம் பணம் ஆகியவற்றை திருடிச் சென்று விட்டனர்.

இது குறித்து பிச்சையம்மாள் அளித்த புகாரின் பேரில் நெகமம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, சிசிடிவி பதிவுகளை கொண்டு விசாரணை நடத்தினர். அதில் கோவை சாய்பாபா காலனியை சேர்ந்த மதன்குமார் (27), கோவில்மேடு பகுதியைச் சேர்ந்த சத்தியசீலன் (24) மற்றும் அன்னக்கொடி (43) ஆகியோர் நகை மற்றும் பணம் திருடியது தெரியவந்தது. இதையடுத்து மூவரையும் போலீசார் கைது செய்தனர்.

மத்திய கல்வி அமைச்சரை கண்டித்து

கோவை, திருப்பூரில் திமுகவினர் ஆர்ப்பாட்டம்

கோவை/பொள்ளாச்சி/திருப்பூர்

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் திமுகவினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய கல்வி நிதியை உடனடியாக வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்த தமிழக எம்.பி.-க்களை நாகரிகமற்றவர்கள் என பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து, தமிழகம் முழுவதும் நேற்று திமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில், காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் தலைமை வகித்தார். இதில், கட்சியின் மாவட்ட, மாநில நிர்வாகிகள், உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவர்கள், மத்திய அமைச்சரை கண்டித்தும், மத்திய அரசை கண்டித்தும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேட்டுப்பாளையத்தில் முன்னாள் எம்.எல்.ஏ அருண்குமார் தலைமையில் திமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொள்ளாச்சி காந்தி சிலை முன்பு நகர திமுக செயலாளர் நவநீத கிருஷ்ணன் தலைமையில் திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எருமை மாட்டுக்கு மாலை அணிவித்து நூதன முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.-வுமான க.செல்வராஜ் தலைமையில், குமரன் சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளரும், திருப்பூர் மேயருமான ந.தினேஷ்குமார் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

அதிமுக கொறடா எஸ்.பி.வேலுமணி இல்ல திருமண வரவேற்பு விழா

பொதுச்செயலாளர் பழனிசாமி, ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்பு

கோவை

அதிமுக கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி - வித்யாதேவி தம்பதியின் மகன் வி.விஜய் விகாஸ், கோவையைச் சேர்ந்த சந்திரமோகன் - திருமாலினி தம்பதியின் மகள் சி.டி.தீக்ஷனா ஆகியோரது திருமண வரவேற்பு விழா கோவை கொடிசியா அரங்கில் நேற்று மாலை நடந்தது.

கோவையில் நேற்று நடந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இல்ல திருமண வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திய அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி. படம்: ஜெ.மனோகரன்

விழாவில் அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான பழனிசாமி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மகாராஷ்டிர மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனும் மணமக்களை நேரில் வாழ்த்தினார். விழாவில் ஏ.ஐ தொழில்நுட்பத்தின் மூலம் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்த்து செய்தி அங்கிருந்த மெகா திரையில் ஒளிபரப்பப்பட்டது. அதில், எஸ்.பி.வேலுமணி மற்றும் மணமக்களின் பெயரை குறிப்பிட்டு ஜெயலலிதா திருமண வாழ்த்து தெரிவிப்பது போல ஒளிபரப்பானது. இந்த வீடியோவை பார்த்த கட்சியினர் ஆரவாரம் செய்தனர். தொடர்ந்து, முக்கிய பிரமுகர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் மணமக்களை வாழ்த்தினர்.

வரவேற்பு நிகழ்வில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், ஆர்.பி.உதயகுமார், ஜெயக்குமார், சி.விஜயபாஸ்கர், செ.ம.வேலுசாமி, ராஜேந்திர பாலாஜி, காமராஜ், எம்.எல்.ஏக்கள் ஏ.கே.செல்வராஜ், செ.தாமோதரன், பொள்ளாச்சி வி.ஜெயராமன், அம்மன் கே.அர்ச்சுணன், பி.ஆர்.ஜி.அருண்குமார், கே.ஆர்.ஜெயராம், வி.பி. கந்தசாமி, பாஜக சட்டப்பேரவைக் குழு தலைவர் நயினார் நாகேந்திரன், நடிகர் சரத்குமார், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். மேலும், முன்னாள், இந்நாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், அதிமுக தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், கட்சியினர், பொதுமக்கள் என பல ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திருமண வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

தேனீக்கள் கொட்டியதில் 30 மாணவர்கள் பாதிப்பு

ஆனைமலை

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே எறையூரில் உள்ள தனியார் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் என 150 பேர் மூன்று தனியார் பேருந்துகளில் பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அணை மற்றும் பூங்காவை சுற்றிப் பார்க்க நேற்று மதியம் வந்தனர். அவர்கள் அணையை பார்வையிட்டபோது, வேட்டைக்காரன் புதூர் கால்வாய் அருகே இருந்த தேன்கூடு திடீரென கலைய தொடங்கியது. தேனீக்கள் வருவதை அறிந்த மாணவ, மாணவிகள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

இருப்பினும், தேனீக்கள் விடாமல் துரத்தி கொட்டியதில் 30-க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு உடலில் வீக்கம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஆழியாறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டது. அதிகளவில் பாதிப்பு ஏற்பட்ட 10 பேர், பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வருந்துகிறோம்!
இரங்கல்
ஆண்டு நினைவு நாள்

குன்னூர் சேம்பக்கரை கிராமத்தில் யானை தாக்கி இளைஞர் உயிரிழப்பு

குன்னூர்

நீலகிரி மாவட்டம் குன்னூர் சேம்பக்கரை பகுதியில் யானை தாக்கி பழங்குடியின இளைஞர் உயிரிழந்தார்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது சேம்பக்கரை பழங்குடியின கிராமம். இந்த கிராமத்தைச் சுற்றி அடர்ந்த வனப்பகுதியும் தேயிலை தோட்டங்களும் சூழ்ந்துள்ளன. இந்தப் பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளது.

இந்நிலையில், பழங்குடியினத்தை சேர்ந்த விஜயகுமார் (33) என்பவர் குன்னூருக்கு வந்து பொருட்களை வாங்கிக் கொண்டு பேருந்தில் சென்றுள்ளார். ஆடர்லி பகுதியில் இறங்கிய அவர், வனப்பகுதி வழியாக கிராமத்திற்கு நடந்து சென்றார். அப்போது ஒற்றை யானை விஜயகுமாரை தாக்கியுள்ளது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வெகு நேரமாகியும் வீட்டுக்கு வராத நிலையில் நேற்று காலை கிராம மக்கள் அவரை தேடிச் சென்றனர்.

அப்போது யானை தாக்கி உயிரிழந்தது தெரிய வந்தது. இதுகுறித்து காவல்துறையினர் மற்றும் வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற வனத்துறையினர், உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, "இப்பகுதியில் பேரிக்காய் மற்றும் பலாப்பழ சீசன் தொடங்க உள்ளது. மேலும் இந்த பகுதியில் விளையும் பழங்களுக்காக காட்டு யானைகள் அதிகளவு வருகின்றன. எனவே இரவு நேரத்தில் பொதுமக்கள் வெளியில் செல்ல வேண்டாம். கவனமுடன் இருக்க வேண்டும்" என்றனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
repkovai@hindutamil.co.in

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0691/2025 **மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**

கண்காணிப்பு பொறியாளர் / ம.நீ.வ.து அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரப்படுகிறது.
மண்டலம் 9ல் உள்ள பல்வேறு தெருக்களில் பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்து புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (7 பணிகள்)
பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் ரூ.96.37 இலட்சங்கள் முதல் ரூ.169.06 இலட்சங்கள் வரை. முன் வைப்பு தொகை : பணியின் உத்தேச தொகையில் 1%
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **26.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **27.03.2025 அன்று மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 947 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**

பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI
கோயமுத்தூர் மண்டலம்

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகளை பொது ஏலத்தில் விடுவதற்கான அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள நகைக்கடன் பெற்ற கடன்தாரர்கள், அவர்தம் சட்ட பூர்வ வாரிசுகள், தங்க நகை / ஆபரணம் / காசு ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில் தொடர்ச்சியான நினைவூட்டுகள் / அறிவிப்புகள் ஆகியவை வங்கியால் அனுப்பப்பட்டிருப்பினும், கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் வங்கிக்கு வைத்துள்ள நிலுவையைத் திரும்பச் செலுத்தவில்லை.

அவர்கள் தங்களது கடன் கணக்கிற்கெதிராக நிலுவையிலுள்ள அனைத்துத் தொகையையும் (நாளது தேதி வரையான வட்டி மற்றும் பிற அனைத்துக் கட்டணங்கள், பொறுப்புகள் / செலவினங்கள் உள்ளிட்டவை) **26.03.2025** க்குள் செலுத்தத் தவறினால் அவர்கள் அடமானம் வைத்துள்ள தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகள் ஆகியவை வங்கி வளாகத்தில் **27.03.2025 அன்று காலை 11.00 முதல் பிற்பகல் 3.00 மணி வரை** பொது ஏலத்தில் விடப்படும் என்ற அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. இதனால் தொடர்புடைய கடன்தாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இடைஞ்சல்களுக்கும், செலவினங்களுக்கும் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது மற்றும் இவ்விஷயம் தொடர்பாக எந்த ஒரு கடன்தாரரிடமிருந்து வரும் எந்த ஒரு கோரிக்கையும், குற்றச்சாட்டும் வங்கியால் நிராகரிக்கப்படும்.

இந்த ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பும் நபர்கள் ரூ.500/– ஐ குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிளை மேலாளரிடம் வைப்புத் தொகையாகச் செலுத்திவிடவேண்டும். இறுதி ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் ஏலம் எடுத்த 48 மணி நேரத்திற்குள் ஏலத்தொகை முழுவதையும் வங்கிக்குச் செலுத்தாவிடில், அவர் வங்கிக்குச் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வங்கியால் திரும்பத்தரப்படமாட்டாது. வங்கி, ஏலத்தில் கிடைக்கும் தொகை போதுமானதாக இல்லை எனவோ அன்றிக்குறைவானது எனவோ கருதினால் எந்த ஒரு காரணமும் காட்டாது ஏலத்தை ரத்து செய்ய உரிமையுடையதாகும். மேலும் தேவையெனில் வங்கி மேலே சொல்லப்பட்ட ஏல அட்டவணையில் குறிப்பிட்ட தேதி, நேரத்தை மாற்றவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது அதனை ரத்து செய்யவும் உரிமையுடையது.

P வடுகபாளையம் கிளை (தற்போது கோயமுத்தூர் சொத்து மீட்புக் கிளையில் உள்ளது – ஏலம் நடைபெறுமிடம் : P வடுகபாளையம் கிளை)

வ.எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரரின் பெயர்	முகவரி	மொத்த எடை கிராம்
1	82927761000559	G.பார்த்திபன்	எண்.96, KRC பிருந்தாவன், பழங்கரை, அவிநாசி, திருப்பூர் – 641 654	147.6
2	82927761005671	G.பார்த்திபன்	எண்.96, KRC பிருந்தாவன், பழங்கரை, அவிநாசி, திருப்பூர் – 641 654	128.7

ஏலாடா கிளை

வ.எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரரின் பெயர்	முகவரி	மொத்த எடை கிராம்
1	823077610007852	வடுகநாதன் ராமசாமி	த/பெ. ராமசாமி, எண்.4/132, VP காந்தி நகர், கொடநாடு – 643 217	6.8

தேதி : 07.03.2025
இடம் : கோயமுத்தூர்
மண்டல மேலாளர்
பேங்க் ஆப் இந்தியா

நீலகிரி பழங்குடியினர் வாழ்க்கை முறை அறிய பெங்களூரு மாணவர்கள் உதகை வருகை

உதகை

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பகுதியில் மாவட்ட மைய நூலகம் கடந்த 72 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த நூலகத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சுமார் 1.75 லட்சம் புத்தகங்கள் உள்ளன. தமிழ், ஆங்கிலம், மலையாளம் மற்றும் பிற மொழி தினசரி நாளிதழ்கள், பருவ இதழ்கள் என சுமார் 240 வெளியீடுகளும், போட்டித் தேர்வுகளுக்கு தனியான புத்தகங்களும் உள்ளன. பார்வையற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள், சிறுவர்களுக்கு தனிப்பிரிவு உள்ளது.

இந்த நூலகத்தில் சிறப்பு அம்சமாக பழங்குடியினர் பண்பாடு சார்ந்த தனி நூலகம் உள்ளது. இதில் இந்தியா முழுவதும் உள்ள பழங்குடியின மக்கள், தமிழ்நாடு மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மக்களின் வரலாறு சார்ந்த ஆராய்ச்சி புத்தகங்கள் உள்ளன.

இந்த நிலையில் கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் உள்ள தேசிய பேஷன் டெக்னாலஜி கல்வி மைய மாணவ, மாணவிகள் சுமார் 30 பேர் இந்த நூலகத்திற்கு வருகை புரிந்து பழங்குடியினர் சம்பந்தப்பட்ட வரலாற்று நூல்களை படித்து தங்கள் படிப்புக்கு குறிப்பெடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு மாவட்ட மைய நூலகர் ரவி, நூல்கள் குறித்தும் பழங்குடியினர்களின் வரலாறு குறித்தும் விளக்கம் அளித்தார். அப்போது பழங்குடியினர் குறித்து மாணவர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இது குறித்து பெங்களூரு மாணவர்கள் கூறும்போது, "பழங்குடியினர் வாழ்க்கை முறைகள் குறித்து ஆன்லைனை காட்டிலும் புத்தகங்களில் அதிக கருத்துகள் உள்ளன. இங்குள்ள புத்தகங்கள் மற்றும் தொகுப்புகள் மூலம் பழங்குடியினர் இடத்துக்கு நேரில் சென்றது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. பழங்குடியினரின் மாறாத கலாச்சாரம் வியப்பளிக்கிறது, பழங்குடியினர் முன்னேற்றத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்," என்றனர்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	09.03.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	45989440000175	1) திரு. சிவகுமார் கிருஷ்ணசாமி, உரிமையாளர் Dharani Plumbing and Electrical Works, மேலும் : K. சிவன் @ சிவகுமார், த/பெ. கிருஷ்ணசாமி, 2) திருமதி. அருள்மொழி சிவகுமார்	13.05.2024	28.02.2025	ரூ.6,22,025.30 (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து இருபத்தி ஐந்து மற்றும் பைசா முப்பது மட்டும்)	01.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.25,23,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சத்து இருபத்தி மூன்றாயிரம் மட்டும்)	ரூ.2,52,300/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து முன்னூறு மட்டும்)	15.04.2025 நேரம் : 03.00 PM	11.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் சார் பதிவு மாவட்டம், பேரூர் தாலுகா, மாதம்பட்டி கிராமம், எஸ்.எப்.எண். 169/2 கொண்ட புஞ்சை ஏக்கர் 0.54 நிலம் பரப்பு வீட்டு சைட்டுகள் லேஅவுட்டாக மாற்றப்பட்டது மற்றும் அதே ஒப்புதல் கொண்ட மாதம்பட்டி பஞ்சாயத்து, நாள் 15.06.2001, நா.கா.எண்.1, நாள் 22.06.2001, அரசு உத்தரவு எண்.225, நாள் 18.08.1997 இதில் மேற்கு பக்கம் பகுதி சைட் எண்.6-ன் **எல்லைகள் : வடக்கே :** 16 அடி அகல கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலை, **கிழக்கே :** சைட் எண்.5, **தெற்கே :** சைட் எண்கள் 9 மற்றும் 10, **மேற்கே :** பழனிசாமி அவர்களின் நிலம். இதன் மத்திய, கிழக்கு-மேற்காக இருபக்கமும் : 65 அடி, வடக்கு-தெற்காக இருபக்கமும் : 45 அடி. அளவுகள் 2925 சதுர அடி பரப்பு அல்லது 271.74 சதுர மீட்டர் அல்லது 6 சென்ட்ஸ் மற்றும் 311 சதுர அடி நிலம் அத்துடன் அதில் கட்டப்பட்ட கட்டிடம் உட்பட மற்றும் பரப்பு 735 சதுர அடி கொண்ட சிமெண்ட் ஷீட் மற்றும் டைல்டு வீட்டு கட்டிடம், 280 சதுர அடி சிமெண்ட் ஷீட் கட்டிடம் மற்றும் 32 சதுர அடி டைல்டு வீட்டு குளியளறை மற்றும் கழிவறை மற்றும் மின்சாரம் மற்றும் தண்ணீர் அதன் பாதுகாப்பு வைப்புகள் உட்பட வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து உபகரணங்கள் உட்பட. கதவு எண். 5/134, வரி அசெஸ்மெண்ட் எண்.1230, E.B.S.C. எண். 106-005-623 மற்றும் தண்ணீர் இணைப்பு எண்.491. மேற்கூறிய சொத்தானது மாதம்பட்டி பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்டது.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084), திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 11.03.2025, இடம் : கோயம்புத்தூர் **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).